# සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
## சபரகமுவ மாகாண தல்வித் திணைக்களம்
## Sabaragamuwa Provincial Department of Education

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018 | தரம் - 11

Second Term Test – 2018 | Grade - 11

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் - I

Information and Communication Technology - I

ஒரு மணித்தியாலம்

One hour

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 – 40 வரையான வினமக்களுக்கு தரப்பட்ட (1), (2), (3), (4) விடைகளுள் சரியானதின் கீழ் கோடிடுக.

1 பின்வருவனவற்றுள் எது தரவாகக் கணிக்கப்படும்?

1. 2017 ஆம் வருடம் க.பொ.த(சா.த) பெறுபேறு.
2. வீட்டின் மாதாந்த மின்சார பட்டியல்.
3. ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் வீரரொருவர் பெற்ற அதி கூடிய ஓட்டங்கள்.
4. கணினி வன்வட்டின் கொள்ளளவு.

2 கீழே தரப்பட்ட உருக்களை அவதானித்து சரியான கூற்றை தெரிவு செய்க.



உரு 1



உரு 2

1. உரு 1 ன்படி பட்டைக் குறிமுறை (Barcode) ஊடாக இணையத் தளத்திற்குள் நுழையலாம்.
2. உரு 2 ன்படி QR குறிமுறை (QR code) ஊடாக இணையத் தளத்திற்குள் நுழையலாம்.
3. உரு 1 ன்படி QR குறிமுறை (QR code) குறிமுறை ஊடாக இணையத் தளத்திற்குள் நுழையலாம்.
4. உரு 2 ன்படி பட்டைக் குறிமுறை (Barcode) ஊடாக இணையத் தளத்திற்குள் நுழையலாம்.

3 கீழ் காணப்படும் கூற்றுக்களில் குவியம் (Hub) மற்றும் ஆளி (Switch) பற்றிய சரியான கூற்று யாது?

A. ஆளியின் தரவு ஊடுகடத்தல் வேகம் குவியத்தின் வேகத்தையும் விட அதிகம்.
B. குவியத்தினூடாக எல்லா தகவல்களையும் கணினிக்குள் செலுத்தப்படும்.
C. ஆளி தரவுகளை குறித்த கணினிக்கு மட்டும் அனுப்பும்.
D. குவியம் ஒற்றை முறைக்கும் ஆளி முழு இருவழிப்போக்கு முறைக்கும் தரவு ஊடுகடத்தும்.

01. A,B,C 02. A,B,D 03. B,C,D 04. A,C,D

4 கீழே காணப்படுபவைகளுள் எது சுட்டுச் (pointing device) சாதனமற்றதாகும்?

01. ஒளிப்பேனை (light pen) 02. இயக்குப் பிடி (joystick)
03. சுட்டி (mouse) 04. பட்டைக் குறிமுறை வாசிப்பான் (barcode reader)

5 வெளியீட்டுச் சாதனங்கள் சம்பந்தமாக தரப்பட்ட கூற்றுக்களில் சரியானவை எது?

A. உயர்தரமான அச்சுப் பிரதிகளை லேசர் அச்சுப் பொறிகள் பெற்றுத் தரும்.

B. காசளிப்பு இயந்திரங்களில் ரசீதுகளை வழங்க மைத்தாரை அச்சுப்பொறி பயன்படுத்தப்படும்.

C. கதோட்டுக் கதிர் குழாயுடன் கூடிய திரைகளில் கதிரியக்கம் அதிகமாகக் காணப்படும்.

01. A மட்டும் 02. B மட்டும் 03. A, C மட்டும் 04. A,B,C யாவும்


6 கொள்ளளவு மற்றும் அணுகல் வேகம் கூடிய சேமிப்பு ஊடகம் இரண்டும் யாது?

01. காந்த நாடா , தற்போக்கு பெருவழி நினைவகம்
02. பதுக்கு நினைவகம் , வன்வட்டு
03. காந்த நாடா , பதிவேடு
04. வன்வட்டு , ஒதுக்கு நினைவகம்

7 ப்ளூ - ரே (blue -ray) தட்டின் கொள்ளளவானது,

01. 650-900 MB
02. 25-128 GB
03. 4.7-9.4 GB
04. 1.44 MB

8 கீழ் காணப்படும் துறை (port) எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?



01. PS /2 port
02. HDMI port
03. RJ 45 port
04. Parallel port

9 வழிப்படுத்தப்படாத ஊடகத்திற்கு (unguided /wireless media) உதாரணமல்லாதது,

01. வானொலி அலை (radio waves)
02. நுண்ணலை (microwaves)
03. ஒளியியல் நார் (fiber optic cable)
04. செங்கீழ்க் கதிர் (infrared)


10 பயன்பாட்டு மென்பொருள் பற்றிய கூற்றுக்களில் பிழையான கூற்று யாது?

1. பயன்பாட்டு மென்பொருள் பிரயோக மென்பொருளுக்கு சமனாகும்.
2. நச்சுநிரல் மென்பொருளும் காப்பு மென் பொருளும் பயன்பாட்டு மென்பொருட்களாகும்.
3. பயன்பாட்டு மென்பொருளினூடாக பணிச்செயன் முறைமையின் வினைத் திறனை அதிகரிக்கலாம்.
4. பயன்பாட்டு மென்பொருள் கணினி வள முகாமைத்துவத்திற்கு பங்காற்றும்.


11 கணினியை இயக்கும்போது (boot) அதனை செயற்படுத்தும் கருவியின் பெயர் யாது?

1. CPU
2. RAM
3. Bootstrap loader
4. CMOS

12 A, B ஆகிய உருக்களில் கோப்பு அணுகல் முறை காட்டப்பட்டுள்ளது. அவை முறையே,




A




B

01. தற்போக்கு அணுகல், நேரடி அணுகல்
02. தற்போக்கு அணுகல், தொடர் அணுகல்
03. நேரடி அணுகல்,தற்போக்கு அணுகல்
04. தொடர் அணுகல், தற்போக்கு அணுகல்

13 கீழ் காணப்படும் எது டெரா பைட் 2 (2TB) ற்கு அண்ணளவாக சமனாகும்.


01. $2^{10}$TB　　02. 2 X$2^{20}$ MB　　03. 2X$2^{21}$ KB　　04. $2^{10}$X$2^{10}$ MB

14 பதினறும எண்ணாகிய ACE யை கணினியில் பிரதிநிதித்துவப் படுத்த தேவையான பிற்றுக்களின் எண்ணிக்கை யாது?

01. 4　　02. 8　　03. 12　　04. 9

15 கீழ் காணப்படும் உண்மை அட்டவணைக்கான தர்க்கச் சுற்று யாது?

| X | Y | F |
|---|---|---|
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 0 |




16 A=10 , B=15, C= 20 எனின் கீழே X மற்றும் Y யின் தர்க்கக் கூற்றை அவதானிக்கவும்.

X: (A>B) OR (C>B)　　　　Y: NOT(A=B)

X மற்றும் Y கூற்றுக்களில் பெறுபேறு முறையே,

01. உண்மை, பொய்　　02. உண்மை,உண்மை　　03. பொய் , உண்மை,　　04. பொய், பொய்


17 சொல்முறை வழிப்படுத்தி மென்பொருள் பற்றிய கூற்றுக்களைக் கருதவும்,

A. Microsoft word 2013 ன் கோப்பு நீட்சி .docx ஆகும்.
B. Libere Office writer ன் கோப்பு நீட்சி .odt ஆகும்.
C. Microsoft word 2013 மற்றும் Libere Office writer என்பவற்றினால் உருவாக்கப்பட்ட ஆவணங்களுக்கு கடவுச் சொல் (password) பயன்படுத்தலாம்.

சரியான கூற்றுக்களானது,

01. A மட்டும்　　02. B மட்டும்　　03. A, C மட்டும்　　04. A B C யாவும்

18 கீழே A , B, C என்பனவற்றினால் காட்டப்படுவன,




1. திரும்பச் செய் (Redo) சேமித்தல் (Save) செய்ததை நீக்குதல்(Undo)
2. சேமித்தல் (Save) செய்ததை நீக்குதல் (Undo) திரும்பச் செய்(Redo)
3. செய்ததை நீக்குதல்(Undo) தொடரொழுங்கு செய்தல் (Sort) திரும்பச் செய் (Redo)
4. செய்ததை நீக்குதல்(Undo) சேமித்தல் (Save) திரும்பச் செய் (Redo)

19 சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் புதிய ஒரு ஆவணத்தைத் திறக்கும் குறுஞ்சாவி எது?

01. Ctrl+N　　02. Ctrl+O　　03. Ctrl+A　　04. Ctrl+S

20 நிரல் மாறா (column absolute) சரியான கல முகவரி யாது?

01. H$23　　02. $H$23$　　03. H23$　　04. $H23

21 தரப்பட்ட விரிதாள் சிற்றறைகளில் (Cell) இருக்கும் பெறுமானங்களின் சராசரியைக் கணக்கிட பயன்படுத்தப்பட்ட சூத்திரங்கள் பின்வருமாறு,

| | M | N |
|---|---|---|
| 1 | 65 | |
| 2 | 26 | |
| 3 | 30 | |
| 4 | | 15 |
| 5 | | 12 |

P=Average(M1:M3,N4:N5)
Q=(M1:M3+N4:N5)/5
R=Average(M1+M2+M3+N4+N5)
S=(M1+M2+M3+N4+N5)/5

தரப்பட்ட சூத்திரங்களில் சரியானவை,

01. Q, R மட்டும்  02. P,R மட்டும்  03. P, S மட்டும்  04. யாவும்

22 மின்னனு விரிதாளில் (spread sheets) கலத்தினுள்ளே “#Value” என காட்சிப்படுமாயின் அதற்கான காரணம் என்ன?

1. உள்ளடக்கப்பட்ட சூத்திரத்தில் குறைபாடுகள் காணப்படல்.
2. தரவுகளை உட்செலுத்த சிற்றறையில் போதியளவு இடமின்மை.
3. இலக்கமொன்றை 0 னால் பிரித்ததனால்
4. உள்ளாக்கப்பட்ட பெயரையோ பெறுமானத்தையோ இனங் காண முடியாமை.

23 கீழே காணப்படும் விரிதாளில் A1 ல் =B2/B1*C3-B1^C3+A3 என்ற வாய்ப்பாட்டை உள்ளாக்கும்போது பெறப்படும் விடை யாது?

01. 12
02. 09
03. 06
04. 03

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | | 2 | |
| 2 | | 8 | |
| 3 | 5 | | 3 |

24 மேகக் கணினி எண்ணக்கரு சம்பந்தமாக கீழே தரப்பட்ட கூற்றுகளை அவதானிக்கவும்.

A. தொடராக இணையத்தில் இணைந்திருக்க வேண்டும்.
B. மென்பொருளுக்கான செலவு அதிகரிப்பதுடன் வன்பொருட்களை இற்றைப்படுத்துவதில் கடினத் தன்மை காணப்படல்.
C. சகல கணினி வலையமைப்பும் மற்றும் வடமற்ற இணைய இணைப்பினூடாக வேண்டிய நேரத்தில் வேண்டிய இடத்திலிருந்து தகவலைப் பெற்றுக் கொள்ளவும் சேமிப்பதற்கும் வசதிகள் காணப்படல்.
D. பராமரிப்பு செலவு குறைவதோடு செயற் திறன் அதிகரிக்கும்.

மேற் காட்டிய கூற்றுகளில் சரியானவைகள் யாவை?

01. A,B மட்டும்  02. A,B,C மட்டும்  03. A,C,D மட்டும்  04. மேற் காட்டிய யாவும்

25 மின்னனு நிகழ்த்துகை மென்பொருளில்( Presentation Software) படவில்லை முழுப் பார்வை (Slide show) முதலில் இருந்தே ஆரம்பிக்க மென்பொருளில் இருக்கும் படவுரு (Icon) யாது?

01. 
02. 
03. 
04. 

26 முழுப் பார்வையின்போது படவில்லைகளுக்கிடையே மாறுவதற்கு காணப்படும் கருவி யாது?

1. படவில்லை மாறுகை Slide Transition
2. அசைவூட்ட பொருட்கள் Animation Objects
3. அசைவூட்ட முறை Animation Scheme
4. படவில்லை வடிவமைப்பு Slide Design

27 தரவுத்தள முகாமையின்போது இரண்டு அட்டவணைகளுக்கிடையில் தொடர்பினை ஏற்படுத்துவதற்காக வேண்டி இரண்டு அட்டவணைகளிலும் காணப்பட வேண்டிய பண்பு யாது?

1. இரண்டு அட்டவணைகளிலும் சமமான புலங்கள் இருக்கக் கூடாது.
2. இரண்டு அட்டவணைகளிலும் ஒரு புலமாவது சமனாக இருத்தல் வேண்டும்.
3. இரண்டு அட்டவணைகளிலும் எல்லா புலங்களும் கட்டாயமாக சமனாக இருத்தல் வேண்டும்.
4. இரண்டு அட்டவணைகளிலும் உள்ள புலங்களின் எண்ணிக்கை கட்டாயமாக சமனாக இருத்தல் வேண்டும்.

28 கீழே தரப்பட்ட அட்டவணையைக் கொண்டு விடை தருக.

| Office Table காரியாலய அட்டவணை | | |
|---|---|---|
| Off _ID | Off_name | Dept _ID |
| R001 | Mr:Herath | DEP01 |
| R002 | Mr:Kumara | DEP02 |
| R003 | Ms: ranjani | DEP03 |

| Visitors Table விருந்தினர் அட்டவணை | | |
|---|---|---|
| Visitor _ID | Visitor_name | Off_ID |
| V18630 | N perera | R001 |
| V18631 | A.M.K Malik | R001 |
| V18632 | S.A Chathura | R004 |
| V18632 | P.A Chathura | R002 |

இந்த இரு அட்டவணையிலும் எப்புலங்கள் அந்நியச் சாவிக்கு (foreign Key) உதாரணமாக அமையும்.

01. காரியாலய அட்டவணையில் Off_ID
02. விருந்தினர் அட்டவணையில் Off_ID
03. விருந்தினர் அட்டவணையில் Visitor_ID
04. காரியாலய அட்டவணையில் Dept _ID

29 கீழே தரப்பட்ட மாறுகையின் மீள்செய்கை எத்தனை முறை நடைபெறும்.

```
S := 10;
Repeat
S := S +5;
Writeln(S);
Until S > 30 ;
```

01. 1
02. 2
03. 4
04. 5

30 கீழ் காணப்படும் பஸ்கல் கூற்றுகளின் வருவிளைவு பற்றிய சரியான கூற்றினை தெரிவு செய்க.

Writeln(X);

1. X மாறியின் பெறுமானம் குறிப்பிடப்பட்டு Cursor ரை அடுத்த வரியின் ஆரம்பத்திற்கு கொண்டு செல்லல்.
2. X மாறியின் பெறுமானம் குறிப்பிடப்பட்டு Cursor ரை அதே வரியில் வைத்திருத்தல்.
3. X மாறியின் பெறுமானம் குறிப்பிடப்பட்டு Cursor ரை அதே வரியில் ஆரம்பத்திற்கு கொண்டு செல்லல்.
4. Cursor ரை அடுத்த வரிசைக்கு கொண்டு சென்று X மாறியின் பெறுமானத்தை புதிய வரியில் எழுதுதல்.

31 P எனும் மாறியின் அடிப்படைப் பெறுமதி 2 எனின் கீழ் காணப்படும் மாறுகை செயற்படும்போது இறுதியில் P மாறியின் பெறுமானம் யாது?

```
for count:= 1 to 4 do
p:= p * count
```

01. 1
02. 10
03. 24
04. 48

32 (KMV:array[1..10] of string;) எனும் Pascal செய்நிரல் கட்டளை ஊடாக நிர்மாணிக்கப்படும் அணி (array) பற்றிய பிழையான கூற்று,

1. 10 உருப்படிகளை சேமிக்கக் கூடிய அணி உருவாக்கப்படும்.
2. இங்கு இலக்கத்துடனான 10 தரவுகளை சேமிக்க முடியும்.
3. அணியின் உருப்படிகளாக 0 தொடக்கம் 9 வரையான இலக்கம் (index) ஊடாக பிரவேசிக்க முடியும்.
4. அணியில் 5 உருப்படிகளை மட்டும் சேமிக்க முடியும்.

33 **Program abc; Var x,y:integer; begin x:=1; y:=x+10; if y>10 then write(y); readln; end.**

மேற்காட்டிய ஒரு வரியில் எழுதப்பட்ட கட்டளைகள் பற்றிய சரியான கூற்று யாது?

1. அது செய்நிரலொன்றின் பூரணமற்ற பகுதியாகும்.
2. அதில் அத்தியாவசியமான பகுதி இல்லாமையினால் தொகுக்க (Compile) முடியாது.
3. செய்நிரலானது நிரலாக்க ஒருங்கிணைப்பு விதி மீறப்பட்டு எழுதியதனால் தொகுக்க (Compile) முடியாது.
4. அது பூரணமானதும் , செயற்படக் கூடியதுமான செய்நிரலாகும்.

34 கீழே காணப்படும் பஸ்கல் செய்நிரலை அவதானிக்கவும்.

```
Program repetition ( input, output);
Var a , b : integer;
Begin
      a := 1;
      b := 0 ;
      Repeat
            a := a + 1 ;
            b := b + 1 ;
            write  ( a + b) ;
       Until a>5 ;
End.
```

மேற்காட்டிய செய்நிரலை செயற்படுத்தியதன் பின்னர் பெறப்படும் வருவிளைவு யாது?

01. 357911 02. 3,5,7,9,11 03. 3,5,7,9 04. 3<br>5<br>7<br>9<br>11

35 கணினி சார்ந்த தகவலமைப்பொன்றை உருவாக்கும்போது (deployment of the system) கட்டமைப்பில் சிறிய அளவிலான புலங்களை முதலில் நிறுவ தேவையேற்படுவது கட்டமைப்பு உருவாக்கத்தின் எந்த முறைக்கு அமைவாக?

1. நேரடியாகச் செயற்படுத்தல் (Direct deployment)
2. சமாந்தரமாக செயற்படுத்தல் (parallel deployment)
3. வெள்ளோட்ட முறைச் செயற்படுத்தல்(pilot deployment)
4. கட்டங்களாக செயற்படுத்தல்.(phase deployment)

36 IP முகவரி பற்றிய தவறான கூற்று யாது?

1. IP முகவரி என்பது இணையத்தில் இருக்கின்ற எல்லா கணினிகளையும் அடையாளங் காண பயன்படுத்தப்படுகின்றது.
2. ஒரே IP முகவரி இணையத்திற்குள் இருக்கின்ற பல கணினிகளுக்கும் இருக்கும்.
3. IP முகவரியானது இணையச் சேவை வழங்குனரினால் வழங்கப்படும்.
4. IP முகவரியானது தசமப் புள்ளிகளினால் வேறாக்கப்பட்ட 0- 255 வரையான நான்கு பெறுமானங்களால் உருவாக்கப்பட்டது.

37 பிழையான IP (IPv4) முகவரி யாது?

1. 172.64.89.25
2. 255.255.255.1
3. 12.255.255.1
4. 225.256.200.20

38 URL என்பது,

1. Uniform Resource Locator
2. Universal Resource Locator
3. Uninterrupted resource Locator
4. Uniform Regional Locator

39 மேகக் கணினி பயன்பாட்டில் காணப்படும் நன்மையல்லாதது,

1. மென்பொருளை உடனடியாக இற்றைப்படுத்திக் கொள்ள முடியுமாதல்.
2. மென்பொருளுக்கான செலவு குறைவாகும்.
3. பராமரிப்பு சிக்கல்கள் குறைவாகக் காணப்படும்.
4. தொடரான இணையத் தொடர்பு இருக்க வேண்டும்.

40 அமல் அனுப்புவதற்கு தட்டச்சு செய்து கொண்டிருந்த மின்னஞ்சல் முகவரியானது நிறைவு பெறுமுன்னரே மறைந்து விட்டது. இது இருக்கக் கூடிய போல்டர் யாது?

01. Inbox 02. Out box 03. draft 04. trash